DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

...

IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM

Sessions Case No. ;SC.NO.63-18

Calender Case No. ;

Primary Register Case No;

Deposition of Witness for :Prosecution P.W.2
Defence
Court

Name Tamilselvi

Father's Name :

Age :

Religion :

Calling :

Address :

Phone /Mobile No. :

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of 21 day of July, 2023.

A1 and A2 and their counsel present.

முதல் விசாரணை =

நான் குன்றத்தூர், பூந்தண்டலம் 2வது குறுக்கு தெருவில் சக்தி நகரில் குடியிருந்தேன். அ.சா.1 என்னுடைய கணவர். 1ம் எதிரி என்னுடைய மகன் 2வது எதிரி மாணிக்கம் என்னுடைய மகனின் நண்பர் ஆவார். தற்போது நான் தனியாக தான் வசித்த வருகிறேன். 4 வருடங்களுக்கு முன்பு அசா1 ன் மனைவி இல்லாத

காரணத்தினால் அவர் என்னை திருமணம் செய்தகொண்டு என்னுடன் குடும்பம் நடத்திவந்தார். நான் அ.சா.1 யை திருமணம் செய்து கொண்டது 1வது எதிரிக்கு பிடிக்காத காரணத்தினால் நான் அச.ா1. உடன் வீட்டில் இருந்தபோது இரவு சுமார் 7.30 முதல் 8 மணிக்குள் 1 மற்றும் 2ம் எதிரிகள் வந்தார்கள். அப்போது மின் இணைப்பு நிறுத்தப்பட்டிருந்தது.. மின் இணைப்பு வந்தவுடன் அ.சா.1க்கு தலையில் காயம் ஏற்பட்டு இருந்தது. அவருக்கு தலையில் கத்தியாலோ , அல்லது சண்டை போட்ட காரணத்தினாலோ கீழ் விழுந்தோ காயம் ஏற்பட்டிருந்தது. இருட்டாக இருந்த காரணத்தினால் யார் வெட்டினார்கள் என்று தெரியவில்லை. காயம் ஏற்பட்டவுடன் தனியார் மருத்துவமனைக்கு அழைத்த சென்றபோது அவர்கள் முதலுதவி சிகிச்சை அளித்து குரோம்பேட்டை அரசு மருத்தவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பிவைத்தார்கள். அரசு மருத்துவமனையில் அ.சா.1 சிகிச்சையில் இருந்தபோத போலீசார் அங்கு வந்து வாக்குமுலம் பெற்றார்கள். போலிசர் என்னிடமும் அந்த சமயம் என்ன நடந்தது என்று கேட்டார்கள்.நான் நடந்த விவரத்தை சொன்னேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை=

வீட்டில் சத்தம் கேட்டவுடன் நிறைய கூட்டம் கூடிவிட்டது. கூட்டத்தில் யார் என்ன பண்ணினார்கள் என்னால் கண்டுபிடிக்கமுடியவில்லை. ரத்தம் வந்த பின்பு தான் அசா.1க்கு அடிப்பட்ட விவரமே தெரியவந்தது. என்னுடைய தாயாரின் வீடு 1ம் குறுக்கு தெருவில் அமைந்துள்ளது. அசா.1க்கு யாரால் காயம் ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது போல் அரசு மருத்தவமனையில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.